# இலங்கை சுபீட்சச் சுட்டெண் - 2020

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA


## தேசிய சுபீட்சம்

இலங்கையின் சுபீட்சச் சுட்டெண்ணானது(SLPI)[1] 2019இல் பதிவாகிய 0.783 உடன் ஒப்பிடுகையில் 2020இல் 0.786 இற்கு சிறிதளவு அதிகரித்தது. ஆண்டுக்காலப்பகுதியில் கொவிட் 19 உலகளாவிய நோய்த்தொற்றிற்கு மத்தியில் 'மக்கள் நலநோன்புகை' துணைச் சுட்டெண், மேம்பட்ட அதேவேளை 'பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல்' மற்றும் 'சமூகப் பொருளாதார உட்கட்டமைப்பு' ஆகிய துணைச் சுட்டெண்களில் வீழ்ச்சிகள் அவதானிக்கப்பட்டன.

|  | 2019 | 2020 |
|---|---|---|
| *இலங்கை சுபீட்சச் சுட்டெண்* | *0.783* | *0.786* |
| ***துணைச் சுட்டெண்கள்*** |  |  |
| *பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல்* | *0.871* | *0.846* |
| *மக்கள் நலனோம்புகை* | *0.731* | *0.795* |
| *சமூக - பொருளாதார உட்கட்டமைப்பு* | *0.748* | *0.718* |

நல வசதிகளுக்கான அதிகரிப்புக்களும் அரச பல்கலைக்கழகங்களில் மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் இடஒதுக்கீட்டில் அதிகரிப்பின் மூலம் எடுத்துக்காட்டப்பட்ட உயர் கல்விக்காக தோற்றுவிக்கப்பட்ட அதிக வாய்ப்புக்களும் மக்கள் நலநோன்புகைச் சுட்டெண்ணின் அதிகரிப்புக்கு பங்களிப்புச் செய்தன. மேலும், உலகளாவிய நோய்த்தொற்று காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்த கைத்தொழில் நடவடிக்கைகள், வாகனப் புகை வெளியேற்றம் குறைவடைந்தமை மற்றும் மக்களின் மட்டுப்படுத்தப்பட்ட நடமாட்டம் என்பவற்றின் விளைவாக தோற்றம்பெற்ற வளியின் தரம் மற்றும் தூய்மையான சூழல் என்பனவும் துணைச் சுட்டெண்களினுள் பதிவாகிய அதிகரிப்புக்கு முக்கிய நிர்ணயக் காரணிகளாக இனங்காணப்பட்டன.

வரைபடம் 1: இலங்கை சுபீட்சச் சுட்டெண் மற்றும் துணைச் சுட்டெண்களின் அசைவுகள் 2016 - 2020




மூலம்: இலங்கை மத்திய வங்கி

கொவிட் -19 உலகளாவிய நோய்த்தொற்றின் பாதகமான விளைவுகளுக்கு மத்தியில், முறைசார் மற்றும் முறைசாரா இரு தொழில்நிலை வகைகளிலும் தொழிலின்மையின் அதிகரிப்பு மற்றும் பொருளாதாரச் நடவடிக்கைகளின் மந்தமான செயலாற்றத்தினால் தோற்றுவிக்கப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீழ்ச்சி என்பன 2020 இல் பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல் துணைச் சுட்டெண்ணின் வீழச்சிக்கு முக்கிய காரணங்காளாக அமைந்தன.

சுகாதார ரீதியான இடர்நேர்வுகளின் காரணமாக பொதுப் போக்குவரத்து பாவனையில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சியுடன் இணைந்து ஆண்டுக்காலப்பகுதியில் விதிக்கப்பட்ட முடக்கல்கள் மற்றும் பயணக் கட்டுப்பாடுகள் என்பவற்றினால் துண்டப்பட்டு நோய்த்தொற்றுக் காலத்தில் போக்குவரத்து குறைவடைந்தமை சமூக-பொருளாதார உட்கட்டமைப்புத் துணைச் சுட்டெண்ணின் வீழ்ச்சிக்கான முக்கிய காரணிகளாக அமைந்தன.

வரைபடம் 2: இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணில் உள்ளடக்கப்படும் அம்சங்கள்





---

[1] இலங்கை சுபீட்சச் சுட்டெண் என்பது நாட்டின் சுபீட்ச மட்டத்தினை அளவிடுவதற்காக இலங்கை மத்திய வங்கியின் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்ட கூட்டுக் குறிகாட்டியாகும். இச்சுட்டெண் மூன்று துணைச் சுட்டெண்களை அதாவது சுபீட்சத்தின் வேறுபட்ட அம்சங்களைக் கொண்டுள்ள 41 மாறிகளினால் அளவிடப்பட்டவாறான பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல், மக்களின் நலனோம்புகை மற்றும் சமூக-பொருளாதார உட்கட்டமைப்பு என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது. இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணைத் தொகுக்கும் முறையியலானது லெகடம் சுபீட்சச் சுட்டெண் தொகுப்பதில் ஈடுபடுத்தும் முறையியலை நுட்பமாக பின்பற்றி 2020 ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்டது. லெகடம் சுபீட்சச் சுட்டெண், நாட்டின் பொருளாதார மற்றும் சமூக நலநோன்புகை மதிப்பீடு செய்யும் உலகளாவிய குறிகாட்டியாகும்.

## மாகாண ரீதியான சுபீட்சம்

மாகாண ரீதியான சுபீட்சச் சுட்டெண்ணில் உயர்வான பெறுமதியுடன் மேல் மாகாணம் முன்னிலை வகித்த அதேவேளை தென் மற்றும் மத்திய மாகாணங்கள் முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகளுக்கு தரப்படுத்தப்பட்டிருந்தன. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மாகாண ரீதியான சுபீட்சச் சுட்டெண்ணில் கிழக்கு மாகாணம் உயர்வான அதிகரிப்பினைப் பதிவுசெய்து, அதனைத் தொடர்ந்து தென், வடமத்திய, வட மேல், ஊவா, மேல் மற்றும் வட மாகாணங்கள் காணப்பட்டன. அதே காலப்பகுதியில், மாகாண ரீதியான சுபீட்சச் சுட்டெண்ணின் உயர்வான வீழ்ச்சிகளை சப்பிரகமுவ மாகாணம் பதிவுசெய்ததுடன் அதற்கு அடுத்து மத்திய மாகாணம் காணப்பட்டது.

வரைபடம் 3: மாகாண ரீதியான சுபீட்சச் சுட்டெண்கள் 2019 - 2020




அட்டவணை 1: மாகாண ரீதியான சுபீட்சச் சுட்டெண்கள் மற்றும் மாகாண நிலைகள்

| | சுபீட்சச் சுட்டெண் | | மாகாண நிலை | |
|---|---|---|---|---|
| | 2019 | 2020 | 2019 | 2020 |
| *மத்திய* | 0.567 | 0.564 | 3 | 3 |
| *கிழக்கு* | 0.498 | 0.516 | 8 | 8 |
| *வட மத்திய* | 0.522 | 0.531 | 7 | 6 |
| *வட மேல்* | 0.549 | 0.556 | 4 | 4 |
| *வடக்கு* | 0.540 | 0.541 | 5 | 5 |
| *சப்பிரகமுவ* | 0.530 | 0.525 | 6 | 7 |
| *தென்* | 0.569 | 0.584 | 2 | 2 |
| *ஊவா* | 0.484 | 0.489 | 9 | 9 |
| *மேல்* | 0.815 | 0.819 | 1 | 1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## மாகாண ரீதியான சுபீட்ச துணைச் சுட்டெண்களின் செயலாற்றம்

### பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல் துணைச் சுட்டெண்

கிழக்கு மாகாணத்திலிருந்து பதிவாகிய துணைச் சுட்டெண்ணினுள் உயர்வான மேம்படுத்தலுக்கு தொழில் நிலையிலும் முறைசாரா சம்பளங்களின் அதிகரிப்பும் பிரதான காரணமாக அமைந்தன. இதற்கு மேலதிகமாக, அதிகரித்த முறைசாரத் துறையின் சம்பளங்கள் மற்றும் ஒப்பீட்டளவில் நிலையான விலை மட்டங்கள் என்பவற்றை முதன்மைக் காரணமாகக் கொண்டு துணைச்சுட்டெண்ணினுள் வட மற்றும் மத்திய மாகாணங்களும் மேம்பட்டுள்ளன. ஏனைய மாகாணங்களில் துணைச் சுட்டெண்கள் சீர்குலைவதற்கு தொழிலின்மை முக்கிய காரணமாக அமைந்தது. மேலும், ஆண்டு காலப்பகுதியில் நிலவிய ஒப்பீட்டளவில் தளம்பல்மிக்க மற்றும் உயர்வான விலைமட்டங்களும் ஊவா, வடமேல் மற்றும் வட மத்திய மாகாணங்களின் துணைச் சுட்டெண்ணின் மந்தமான செயலாற்றத்திற்கு பங்களிப்புச் செய்துள்ளன.

### மக்கள் நலனோம்புகை துணைச் சுட்டெண்

2020 ஆண்டு காலப்பகுதியில் உலகளாவிய நோய்த்தொற்றினால் தூண்டப்பட்ட முன்னெச்சரிக்கைகளின் மற்றும் நடவடிக்கைகளின் விளைவாக ஏற்பட்ட நலத்திற்கான அதிகரித்த வசதிப்படுத்தல், அதிகரித்த வளியின் தரம் மற்றும் தூய்மையான சூழல் அத்துடன் பல்கலைக்கழக உள்நுழைவில் கணிசமான அதிகரிப்புடன் கூடிய உயர் கல்விக்கான அதிகரித்த வாய்ப்புக்கள் என்பனவற்றின் காரணமாக அனைத்து மாகாணங்களிலும் துணைச் சுட்டெண் மேம்பட்டது. வட மாகாணத்தில் துணைச் சுட்டெண்ணினுள் உயர்வான மேம்படுகை அறிக்கையிடப்பட்ட அதேவேளை, மத்திய மாகாணத்தில் ஆகக் குறைந்த அதிகரிப்பு அறிக்கையிடப்பட்டது.

### சமூக-பொருளாதார உட்கட்டமைப்பு துணைச் சுட்டெண்

அனைத்து மாகணங்களும், இச்சுட்டெண்ணில் வீழ்ச்சிகளைப் பதிவுசெய்துள்ளதுடன் உலகளாவிய நோய்த்தொற்றுச் சூழலில் பொதுப் போக்குவரத்து வசதிகளின் பயன்பாடு கணிசமாக குறைவடைந்தமை இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது. வட மாகாணத்திலிருந்து உயர்வான வீழ்ச்சி பதிவாகியமையுடன் இக்குறைவடைந்த செயலாற்றத்திற்கு பாதுகாப்பான குடிநீர் குறைவாக கிடைக்கப்பெறும்தன்மை முக்கிய காரணமாக அமைந்தது. அதேவேளை, இச்சுட்டெண்ணின் குறைந்தளவான வீழ்ச்சி வடமேல் மாகாணத்தில் அவதானிக்கப்பட்டது.

அட்டவணை 2: மாகாண ரீதியான சுபீட்ச துணைச் சுட்டெண்கள்[2]

| | 2019 | 2020 |
|---|---|---|
| **பொருளாதார மற்றும் வியாபாரச் சூழல் துணைச் சுட்டெண்** | | |
| *மத்திய* | 0.598 | 0.603 |
| *கிழக்கு* | 0.554 | 0.586 |
| *வட மத்திய* | 0.608 | 0.605 |
| *வட மேல்* | 0.605 | 0.595 |
| *வடக்கு* | 0.614 | 0.623 |
| *சப்பிரகமுவ* | 0.553 | 0.547 |
| *தென்* | 0.573 | 0.572 |
| *ஊவா* | 0.554 | 0.540 |
| *மேல்* | 0.900 | 0.889 |
| **மக்கள் நலனோம்புகை துணைச் சுட்டெண்** | | |
| *மத்திய* | 0.502 | 0.532 |
| *கிழக்கு* | 0.454 | 0.493 |
| *வட மத்திய* | 0.506 | 0.562 |
| *வட மேல்* | 0.530 | 0.567 |
| *வடக்கு* | 0.499 | 0.570 |
| *சப்பிரகமுவ* | 0.520 | 0.555 |
| *தென்* | 0.553 | 0.612 |
| *ஊவா* | 0.437 | 0.489 |
| *மேல்* | 0.710 | 0.749 |
| **சமூகப் பொருளாதார உட்கட்டமைப்பு துணைச் சுட்டெண்** | | |
| *மத்திய* | 0.600 | 0.557 |
| *கிழக்கு* | 0.486 | 0.468 |
| *வட மத்திய* | 0.450 | 0.426 |
| *வட மேல்* | 0.513 | 0.507 |
| *வடக்கு* | 0.506 | 0.431 |
| *சப்பிரகமுவ* | 0.516 | 0.472 |
| *தென்* | 0.581 | 0.568 |
| *ஊவா* | 0.463 | 0.437 |
| *மேல்* | 0.835 | 0.820 |

[2] சுட்டெண் பெறுமானங்கள் கடந்த 14 ஆண்டுகளில் பதிவாகிய அதன் சிறப்பானதும் மோசமானதுமான பெறுமானங்கள் தொடர்பில் ஒவ்வொறு மாறியையும் சீராக்குவதன் மூலம் தொகுக்கப்பட்டன. சீராக்கப்பட்ட மாறியின் மூலம் எடுக்கப்படக்கூடிய அதிஉயர்வான மற்றும் ஆகக்குறைந்த பெறுமானங்கள் முறையே 1 மற்றும் 0 ஆகும். அதன் மூலம், சுட்டெண் பெறுமதிகள் 0 இற்கும் 1 இற்கும் இடையிலான வீச்சாகவும் காணப்படுகின்றன. இதனால் உயர்வான சுட்டெண் பெறுமானம் என்பது குறித்த காலத்திலும் மாகாணங்கள் ரீதியிலும் அதன் செயலாற்றம் ஒப்பீட்டளவில் உயர்வானதாகும். அத்துடன் நேர்மாறாகவும் காணப்படும்.

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுபீட்சச் சுட்டெண்**

சுபீட்சச் சுட்டெண், 41 மாறிகளைப் பயன்படுத்தி தொகுக்கப்பட்டிருப்பதுடன் மூன்று துணைச் சுட்டெண்களாக வகைப்படுத்தப்பட்டிருக்கின்றன. அனைத்து மூன்று துணைச் சுட்டெண்களும் சுபீட்சச் சுட்டெண்ணில் சமமான நிறையினைக் கொண்டிருக்கின்றன.

பொருளாதார வியாபார சூழல் துணைச் சுட்டெண்ணானது விலை உறுதிப்பாடு, வாழ்க்கைத்தரம், வருமானம், வறுமை, தொழில்நிலை, கைத்தொழில் அடர்த்தி மற்றும் வங்கித்தொழில் அடர்த்தி ஆகிய வகைகளாக்கப்பட்ட 9 மாறிகளைப் பயன்படுத்தி தொகுக்கப்படுகிறது. மக்கள் நலனோம்புகை துணைச் சுட்டெண்ணைத் தொகுக்கும் போது சுகாதாரக் கவனிப்பு வசதிகள் கிடைக்கும்தன்மை, கல்வி வசதிகள் கிடைக்கும்தன்மை மற்றும் தரம், செல்வம், பொழுதுபோக்கு வசதிகள் கிடைக்கும்தன்மை மற்றும் பயன்பாடு, வளியின் தரம் மற்றும் சூழலின் சுத்தமான தன்மை என்பன தொடர்பான 22 மாறிகளை உள்ளடக்கித் தொகுக்கப்படுகிறது. சமூக பொருளாதார உட்கட்டமைப்பு துணைச் சுட்டெண் 10 மாறிகளை உள்ளடக்கி இருப்பதுடன் அவை தொடர்பான அம்சங்களாக போக்குவரத்து வசதிகள் கிடைக்கும்தன்மை, வீதி உள்ளடக்கம் கிடைக்கும்தன்மை, தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப வசதிகள் கிடைக்கும்தன்மை, மின்வலு கிடைக்கும்தன்மை, பாதுகாப்பான மற்றும் சுத்தமான குடிநீர் வசதிகளின் கிடைக்கும்தன்மை, சுகாதாரம் கிடைக்கும்தன்மை, குற்றச்செயலற்ற சூழல் என்பன காணப்படுகின்றன.

**முறையியல்**

இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணைத் தொகுப்பதில் பயன்படுத்தப்படும் மாறிகள் அளவீட்டின் பல்வேறுபட்ட அலகுகளின் வடிவில் காணப்படுகின்றன. ஆகவே, கடந்த பதினான்கு ஆண்டுகளுக்கு மேற்பட்ட தரவுகளை தரப்படுவதன் மூலம் பொதுவான அளவு ஒன்றிற்கு இவ்வனைத்து மாறிகளும் மாற்றியமைக்கப்படுகின்றன. நாடு மற்றும் மாகாணங்களுக்கான சுட்டெண் பெறுமதிகள் தனித்தனியாக தொகுக்கப்படுவதனால் மாகாண ரீதியான சுட்டெண்களை தேசிய மட்டத்தில் அமைந்த சுட்டெண்களுடன் ஒப்பிட முடியாது. எனவே, மாகாண ரீதியான மட்டத்திலமைந்த சுட்டெண்களை மாகாணங்களுக்கிடையே அத்துடன் காலத்துடன் ஒப்பிட முடியாத அதேவேளை தேசிய மட்டத்திலான சுட்டெண்களை கால அளவில் மட்டுமே ஒப்பிடமுடியும்.

இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணைத் தொகுக்கும் முறையியலானது நாட்டின் பொருளாதார மற்றும் சமூக நலநோன்புகை மதிப்பீடு செய்யும் உலகளாவிய குறிகாட்டியான லெகடம் சுபீட்சச் சுட்டெண் தொகுப்பதில் ஈடுபடுத்தப்படுகின்ற முறையியலை நுட்பமாக பின்பற்றி 2020 ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்டது. கடந்த 10 ஆண்டுகளில் தனிப்பட்ட மாறிகளை தரப்படுத்துவதற்குப் பதிலாக தொலைவிலிருந்து எல்லை அணுகுமுறையைப் பின்பற்றி கடந்த 14 ஆண்டுகளில் பதிவுசெய்யப்பட்ட அதன் சிறப்பானதும் மோசமானதுமான பெறுமானங்களைப் பொறுத்து ஒவ்வொரு மாறியையும் சீராக்குவதன் மூலம் திருத்தம் செய்யப்பட்டது. இதனூடாக சுட்டெண்ணின் வீச்சு 0 இற்கும் 1 இற்கும் இடைப்பட்டிருந்தால் அது அதிகம் மிகவும் புரிந்துகொள்ளக்கூடியதுடன் உயர்வான சுட்டெண் பெறுமதி அதன் செயலாற்றத்தை ஒப்பீட்டளவில் உயர் என்பதையும் குறைவான பெறுமதி குறைவான செயலாற்றமும் ஆகும்.